2013 ஏப்ரல் 26]
பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

334—

தொடக்கப் பள்ளி

***20536—திரு. கே.பி. நாகராஜன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, களையூர் ஊராட்சியில் புதிய ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, களையூர் ஊராட்சி, புதிய தொடக்கப் பள்ளி துவங்க நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை நிறைவு செய்துள்ளதால், இப்பகுதியில் புதிய தொடக்கப் பள்ளி துவங்குவது குறித்து பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. நாகராஜன் அவர்கள்.*

முற்பகல் 11–10

திரு. கே.பி. நாகராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக உருவாக்கப்பட்டுள்ள மயிலம் சட்டப் பேரவைத் தொகுதியிலே, வல்லம் ஒன்றியத்திலே, களையூர் என்ற கிராமத்திலே இதற்கு முன்பாக தொடக்கப் பள்ளி அங்கே நடைபெற்றுக்கொண்டிருந்தது. அந்தப் பள்ளி Management School ஆக செயல்முறைப்படுத்தப்பட்டது. அந்தப் பள்ளியை நடத்தி வந்தவர் அதை கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பாகவே அரசாங்கத்திற்கு எழுதிக் கொடுத்துவிட்டு இப்பொழுது

சென்னைக்கு குடிபெயர்ந்து விட்டார். அனைத்து ஆவணங்களும் இயக்குநரிடத்திலே கொடுக்கப்பட்டுள்ளது. கல்வித் துறையைப் பொறுத்தவரையில் தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக உருவாக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பாடுபட்டுக்கொண்டிருக்கும் வேளையிலே, புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மயிலம் சட்டப் பேரவைத் தொகுதியிலே கல்விக்கூடம் இல்லாமல் ஒரு கிராமமா என்று நினைத்துப் பார்க்க முடியாத நிலை இருக்கும் வேளையிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு இதை எடுத்துச் சென்று அங்கே தொடக்கப் பள்ளியை ஆரம்பிப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய தொகுதிப் பற்றை இங்கே வெளிப்படுத்தினார். நான் ஏற்கெனவே மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெளிவாகத் தெளிவுபடுத்தி இருக்கிறேன். அரசுக்குக் கருத்துரு வரப்பெற்று, போதிய நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே, பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தபோதிலும், அவருடைய தொகுதிப் "பற்றை" வெளிப்படுத்தி இருக்கிறார். இருந்தாலும், அரசுக்கு "பற்று" வந்துவிடக் கூடாது அல்லவா என்பதை அவர் உணர வேண்டும். அவற்றோடு மாத்திரமல்ல, அவர் அரசின்மீதும் கொஞ்சம் "பற்று" வைக்க வேண்டும். ஆகவே, கேள்வியை எழுப்புகிறபோது கொஞ்சம் பற்றற்றுப் பேச வேண்டும் என்பதைப் பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக அவருடைய கோரிக்கை பரிசீலனை செய்யப்பட்டு, இவ்வாண்டே அதற்குரிய வாய்ப்புகள் உருவாகும் என்பதைப் பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.